1994 மார்ச் 28]

109-

கடவூர் ஒன்றியத்தில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுதல்

* 9817—**திரு. ஆ. அறிவழகன் :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை தாலுகா, கடவூர் ஒன்றியத்தில் கவரப்பட்டி கிராமத்தில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் பணிக்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

விடை—

(அ) ஆம்

(ஆ) இப்பணி நடப்பாண்டில் (1993-94) செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு :-** ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவைக்கு (Senate) உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழக ஆட்சிப்பேரவைக்கு (Senate) இச்சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிடமிருந்து இரண்டு உறுப்பினர்களைத் தொ்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. தேர்ந்தெடுக்கப்படுபவரின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும். இருப்பினும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவதொரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவர்களின் பதவிக் காலம் முடிவடையும்.